Registered No. M-4483 Madras War Review (TAMIL) 26-5-1944

# யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம் ஞு மேமீ 26௳, வெள்ளிக்கிழமை இதழ் 38

மிஸ்டர் ரூஸ்வெல்ட்.

## புதிய அதி பலமான தாக்குதல்கள்

☆

"மேற்கிலும் தெற்கிலும் கிழக்கிலு முள்ள தாக்குதல் தளங்களி லிருந்து நாஜிகள் வயப்பட்டிருக்கும் ஐரோப்பிய நாடுகளை புதிதாகவும் அதிக பலங் கொண்டும் நேச நாடுகள் இப்போது தாக்கப் போகின்றன.

நமது முழு பலத்தையும் உலகிலுள்ள இதர சுயேச்சை மக்களின் முழு பலத்தையும் ஒன்று திரட்டித் தான், பாதுகாப்புப் போராடிக் கொண்டிருந்த நாம், எதிர்ப்புப் போராட்டத்தில் இறங்கியிருக்கிறோம். நமது ஒற்றுமையை நிலை நாட்டிக் கொள்ளுவதனால், முடிவில் நிச்சயமாக வெற்றி பெறுவோம். யுத்தத்திற்குப் பிறகுங் கூட நாம் ஒற்றுமையா யிருப்பதனால், சமாதானம் நிலைக்கும். அக்காலத்தில், சமாதானத்தோடும் சுயேச்சையோடும் பாதுகாப்போடும் மக்கள் வாழ்ந்து உழைத்து, இறைவனைத் தொழலாம்."

மிஸ்டர் ரூஸ்வெல்ட், அமெரிக்கத் தலைவர்,
சென்ற திங்கட்கிழமை, அமெரிக்கக் காங்கிரசுக்கு அனுப்பிய
15-வது கடன் குத்தகை அறிக்கையில் குறிப்பிட்டது.

## பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| முகப்புப் படம் : மிஸ்டர் ரூஸ்வெல்ட் .. .. | 1 |
| புதிய அதி பலமான தாக்குதல்கள் .. .. | 1 |
| முரசொலி .. .. .. .. | 2 |
| விளம்பரம் : S. S. S. .. .. .. | 2 |
| தலை சிறந்த செயல் .. .. .. | 3 |
| மிகச் சிறந்த தொகை .. .. .. | 3 |
| பம்பாய் கஷ்ட நிவாரணம் .. .. .. | 4 |
| வானொலி நாட் குறிப்புக்கள் .. .. | 4 |
| சமிக்ஞைக் காரருக்கு பிறந்த நாள் இனும் .. | 4 |
| தலையங்கம் : இத்தாலியப் போர் .. .. | 5 |
| போர் முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 6 |
| முகமலர்ந்து வழங்குவோர் .. .. .. | 7 |
| 3-வது சென்னைப் படையின் வீரச் செயல்கள் .. | 7 |
| மாண்டவன் மீண்ட காதை .. .. .. | 9 |
| ஜப்பானை நோக்கித் தொழ வேண்டுமாம் .. | 10 |
| விபரீதத் தியாகம் .. .. .. | 11 |


# மு ர சொ லி

" ஐரோப்பாவைத் திக்குமுக்காடச் செய்ய வேண்டிய பிரச்சினையை முடிவு செய்வது மேற்கே நடைபெறப்போகும் போராட்டமல்ல ; மத்தியதரைக் கடல் பகுதியிலிருந்து தாக்குவதனாலுமல்ல ; ரஷ்யப் போர்முனையிலுமல்ல ; ஆனால், இம்மூன்றும் ஒன்று படுவதனால் தான்."

—ஜெனரல் ஸ்மட்ஸ், பர்மிங்ஹாமில்
மே மாதம் 19-ம் தேதி கூறியது.

* * * *

"நான் சீனாவுக்கு ஒரு செய்தி கொண்டு போகிறேன். இந்த மகத்தான சகிப்புத் தன்மையுள்ள மக்களுக்குக் கூடியவரை காலாகாலத்தில் உதவி யனுப்பிக் கொண்டிருப்பதைத் தடுக்க, பர்மிய காடுகளாலும், இமயமலையாலும், ஜப்பானிய யுத்தக் கப்பல்களாலும் முடியாது. சீனாவுக்கு, அமெரிக்கத் தலைவரின் செய்தி இதுதான்."

" மகத்தான சீனத் தலைவரான ஷியாங்கெய்-ஷேக் எம் தலைவர் இப்படிக் கூறுவதை நேரில் கேட்டார். சீனாவுக்கு உதவ வேண்டுமென்று அமெரிக்கா கொண்டுள்ள உறுதி நிரந்தரமானது ; வெற்றி கிடைக்கும் வரை இந்த உதவி வழங்கப்படும் என்னும் செய்தியை சீனாவின் கோடிக்கணக்கான மக்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக வற்புறுத்திக் கூறும் பொருட்டுத் தான், நான் போகிறேன்."

—ஹென்ரி ஏ. வாலஸ், அமெரிக்க உபதலைவர்
வாஷிங்டனில் சனிக்கிழமை கூறியது.


**S. S. S.**

நாஷனல் சேவிங்ஸ்
சர்டிபிகேட்டுகளை வாங்கி

விலைகள் உயர்வதைத்
தடுத்து, ஏழைகளுக்கு உதவுங்கள்.

**S. S. S.**

அமித சேமிப்பு, கொள்ளை லாபமடிப்பது,
பட்டினி, இவற்றை தடுங்கள்.

நாஷனல் சேவிங்ஸ்
சர்டிபிகேட்டுகளை வாங்குங்கள்.

# த லை சிறந்த செயல்

சென்னை கவர்னர் நிதிக்கு மூன்று கோடி ரூபாய் சேர்ந்து விட்ட தென்று அறிவிக்கப் பட்ட போது மேன்மை தங்கிய வைசிராய் பிரபு அவர்கள் மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அவர்களுக்குக் கீழ்க் கண்ட தந்தியை அனுப்பி யிருக்கிறார்கள் :—

"தங்கள் யுத்த நிதிக்கு மூன்று கோடி ரூபாய்ச் சேர்ந்து விட்டது என்று கேட்டுப் பெரும் மகிழ்ச்சி யடைகிறேன். இது தலை சிறந்த தோர் செயல். இது பற்றி சென்னை நகருக்கு என் மனபூர்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந் நிதி மேலும் பெருக வேண்டு மென்று நல்லாசி கூறுகிறேன்."

# மிகச் சிறந்த தொகை

## யுத்த நிதிக்கு 3 கோடி வசூல்

சென்னை கவர்னர் மேன்மை தங்கிய சர் ஆர்தர் ஹோப் அவர்கள் கீழ்க்கண்ட செய் தியை விடுத்திருக்கிறார்கள் :—

கவர்னர் மாளிகை,
உதகமண்டலம்,
மே 18, 1944.

யுத்த நிதிக்கு இதுவரை 3 கோடி ரூபாய் வசூலாகி விட்டது. இது மிகச் சிறந்த தொகை.

தளராத தாராளத் தன்மையோடு எல்லா வகை மக்களும், பணக்காரர்களும், ஏழை களும் இதற்கு உதவிக் கொண்டிருந்திருக்கிறார்கள். நான் பெருமித மடைகிறேன். ஏனென்றால், மற்ற மாகாணங்களை விட இம்மாகாணத்தில் தாமாகவே அதிகத் தொகை கொடுத்துதவியது மட்டுமன்றி, யுத்தக் கடனாகவும் 31 கோடி ரூபாய் கொடுத்துதவியிருக் கிறார்கள்.

தங்கள் நன்கொடைகள் நம் படையினர் தலைசிறந்த வீரத்திற்கு ஏற்ற பரிசுகளாகும். நாம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு மகா கடுமையாக நாம் போராடிக் கொண்டிருந்த கஷ்ட காலத்தில், இந் நன்கொடைகள் ஊக்கம் அளித்தன. நாம் பூரண வெற்றி பெறுமுன் ஏற்படக்கூடிய நல்ல காலத்திலும், உங்கள் உதவி கிடைக்கும் என் னும் நம்பிக்கை எனக்கு உண்டு

ஆர்தர் ஹோப்,
சென்னை கவர்னர்.

# பம்பாய் கஷ்ட நிவாரணம்

## சென்னையின் தாராள உதவி

**சென்னை கவர்னர் யுத்த நிதியிலிருந்து பம்பாய் கவர்னருக்கு ரூ. 50,000 அனுப்பப்பட்டதாக சமீபத்தில் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியானது: சமீபத்தில் பம்பாயில் நடைபெற்ற வெடிகுண்டு விபத்திற்கு உள்ளானவர்களிடம் சென்னை நகர மக்கள் கொண்டுள்ள அனுதாபத்திற்கு அறிகுறியாக இது அனுப்பப் பட்டது. இது பற்றி மேன்மை தங்கிய சர் ஆர்தர் ஹோப் அவர்களுக்கும் மேன்மை தங்கிய சர் ஜான் கால்வில் அவர்களுக்கும் நடை பெற்ற கடிதப் போக்கு வரவுகளின் மொழிபெயர்ப்பு வருமாறு :—**

உதகமண்டலத்திலிருந்து 1944-ம் வருஷம் மே மாதம் 3-ம் தேதி மேன்மை தங்கிய சென்னை கவர்னர் கனம் சர் ஆர்தர் ஹோப் ஜி.சி.ஐ.இ. அவர்கள், மேன்மை தங்கிய பம்பாய் கவர்னர் கனம் லெப்டினென்ட் கர்னல் சர் ஜான் கால்வில் ஜி.சி.ஐ.இ. அவர்களுக்கு எழுதிய கடிதம் :

எனது அருமை கால்வில், பம்பாய் நகரத்திற்கு, சமீபத்தில் நேர்ந்த பேரா பத்தைக் குறித்தும், அதனால் அவ்வூர் மக்களில் ஒரு சில பகுதியாருக்கு ஏற்பட்ட கொடுங் கஷ்டங்களைக் குறித்தும், சென்னையிலுள்ள நாங்கள் படித்துப் பார்த்துப் பெரிதும் வருந்தினோம். இந்தப் பேரா பத்திற்கு உள்ளானவர்களின் துன்பங்களைக் களையும் பொருட்டு, ரூ. 50,000 கொடுத்துதவ வேண்டுமென்று சென்னை யுத்த நிதிக் கமிட்டியார் சென்னை மக்களின் சார்பாக சிபார்சு செய்திருக்கிறார்கள். இந்தத் தொகையைத் தங்கள் காரியதரிசிக்கு அனுப்பி வைக்குமாறு எனது பொருளாளருக்குக் கட்டளையிட்டிருக்கிறேன். அத்தொகையைத் தங்கள் யுக்தப்படி விநியோகிக்கலாம்.

தம் நாட்டவரான பம்பாய் வாசிகள் அனுபவித்த துன்பங்களையும் கஷ்டங்களையும் பற்றி தாம் கொண்டுள்ள ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளும் பொருட்டு சென்னை மக்கள் இத் தொகையை யனுப்பியிருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள்.

* * *

பம்பாயிலிருந்து மே மாதம் 8-ம் தேதி மேன்மை தங்கிய பம்பாய் கவர்னரவர்கள், மேன்மை தங்கிய சென்னை கவர்னரவர்களுக்கு எழுதிய கடிதம்—

எனதருமை ஹோப், மே மாதம் 3-ம் தேதி தாங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது. வெடியினாலும், துறைமுகத்தில் ஏற்பட்ட தீயினாலும் நேர்ந்த பெருந் துன்பங்களுக்கு உள்ளானவர்களின் கஷ்டங்களைப் போக்கும் பொருட்டு, தாங்கள் தங்கள் யுத்த நிதியினின்று தாராளமாய்க் கொடுத்துதவிய ரூ. 50,000 யும் பெற்றுக் கொண்டேன். இது பற்றி நான் தங்களுக்குப் பெரிதும் நன்றி செலுத்துகிறேன். இச் செயலைக் கொண்டு, தம் ஆழ்ந்த அனுதாபத்தை யறிவித்துக் கொண்ட சென்னை மக்களுக்கு நான் பெரிதும் நன்றி செலுத்துகிறேன். இந்தத் தொகை இங்கு அனுப்பப்பட்டதைக் குறித்து பம்பாயிலிருக்கும் ஒவ்வொருவரும் பெரிதும் பாராட்டுவார்கள்.

### வானொலி நாட் குறிப்புகள்.

1944-ம் ஆு மேமீ 28உ மாலை 7-15 மணிக்கு—திருச்சி—“வாங்குபவர்” மிஸ்டர் எம். கே. முனுசாமி.

1944-ம் ஆு மேமீ 30உ மாலை 7 மணிக்கு—சென்னை—“யுத்த விமரிசம்.”

மாலை 7-15 மணிக்கு—திருச்சி—“நாமும் யுத்தமும்” மிஸ்டர் கலியாணசுந்தரம்.

1944-ம் ஆு மேமீ 31உ மாலை 7 மணிக்கு—சென்னை—“யுத்த முயற்சி” ராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரன் செட்டியார்.

மாலை 7-15 மணிக்கு—திருச்சி—“கறிகாய்ப் பெருக்கம்” என்னும் தொடரில் “லாபம் பெற கறிகாய் சாகுபடி” மிஸ்டர் வலிவலம் கே. மனத்துணை நாத தேசிகர்.

1944-ம் ஆு ஜூன்மீ 2உ மாலை 7 மணிக்கு—சென்னை—“பொது மக்கள் யுத்தம், சேமிப்பு.”

### சமிக்ஞைக் காரருக்கு பிறந்த நாள் இனாம்

#### ஆரோக்கியசாமிக்கு அதிர்ஷ்டம்

மிகவும் தகுதியுள்ள, காயப்பட்ட ஒரு படைச் சேவகருக்கு வழங்கும்படி பஞ்ச மஹால் ஜில்லாவைச் சேர்ந்த அமோட் சர்தார் நவாப் சர் நஹார் சிங்ஜி தாகூர் உதவிய ரூ. 100-யும், இந்திய சமிக்ஞைப் படையைச் சேர்ந்த 05120 ஆரோக்கியசாமிக்குக் கொடுக்கப்பட வேண்டு மென்று படைத் தலைவர் சர் க்ளாட் ஆக்கின்லெக் தீர்மானித்துவிட்டார். 5-வது இந்தியன் டிவிஷன் சமிக்ஞைப் படையில் டோப்ருக்கில் போராடிக் கொண்டிருக்கும்போது ஒரு சுரங்க வெடி வெடித்து ஆரோக்கியசாமி கொடுங்காயப்பட்டார். அவர் விலாசம் பெங்களூர், ஹெப்பால், முனிரெட்டிபாளையம்.

# யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV 1944-ம் வருடம் மேமீ 26உ, வெள்ளிக்கிழமை இதழ் 38


## இத்தாலியப் போர்

"புலி பதுங்குவதெல்லாம் பாய்ச்சலுக்கு." இப் பழமொழி மிகவும் பொருத்தம். இத்தாலிய போர் அரங்கங்களில் சென்ற சில வாரங்களாக மந்தம் நிலவியது. ஆப்பிரிக்காவில் அரும் பெரும் விருதுகள் பெற்ற 8-ம் படையும் 5-ம் படையும் இத்தாலியில் இருந்துங் கூட, போர் மும்முரமாக நடைபெறவில்லை யென்றால், அதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கத் தான் வேண்டும். முக்கியமான காரணம் இரண்டாம் போர் முனை ஆரம்பந் தான்.

இரண்டாம் போர் முனை இன்னும் ஆரம்பமாக வில்லை என்று சொல்லப் படுகிறது. என்றாலும், இப்போது இத்தாலியில் நடை பெறும் போராட்டம் மகா முக்கியமானது. இத்தாலி ஒரு கேந்திர ஸ்தானம் போல் அமைந்திருக்கிறது. இத்தாலியை நேச நாடுகள் பிடித்து விட்டால், ஜெர்மனியையும் ஜெர்மனி கைப்பற்றியுள்ள நாடுகளையும் இலகுவில் கைப்பற்றி விடலாம். ஆகவே தான், இத்தாலியில் சிறந்த அரண்களை ஜெர்மானியர்கள் கட்டி வைத்துக் கொண்டிருந்தார்கள். இயற்கையும் அவர்களுக்கு உதவி செய்தது. காடுகளடர்ந்த மலைகள் இத்தாலியின் நடுவே உயர்ந்து தென் கடலில் தொடர்ந்து நிற்கிறது. ஆகவே, கிழக்கே யுள்ள படைகள் மேற்கே போவதும், மேற்கே யுள்ள படைகள் கிழக்கே போவதும் இலகுவல்ல. இத்தாலியின் தலை நகரமான ரோமாபுரி, மேற்குக் கரையோரமா யிருக்கிறது. இதைக் காப்பாற்ற ஜெர்மன் படைகள் அரும்பாடு படுகின்றன. ஆனால் வெற்றியில் வெறி கொண்டது போல் நேச தேசப் படைகள் போராடுகிறார்கள். கஸ்டாவ் அரணைத் துளைத்துப் பிடித்து விட்டார்கள். இந்த வெற்றி மிகச் சிறந்த வெற்றியாகும். இந்தத் தோல்வியினால் ஜெர்மானியர் அடைந்த நஷ்டம் கொஞ்ச மல்ல. அதோடு விட்டார்களா? அடால்ப் ஹிட்லர் அரணையும் அடைந்து ஒரு கை பார்த்து விட்டார்கள். பல பிளவுகள் அதில் கண்டார்கள். இது கண்ட ஜெர்மன் படைத் தலைவரான கேசல்ரிங் இத்தாலியிலுள்ள ஜெர்மன் படைகள் எல்லாவற்றையும் திரட்டிக் கொண்டிருக்கிறார். ஜெர்மானிய அரண் முறையே குலைந்து விட்ட தெனக் கூறலாம். இனி நேச நாட்டுப் படைகளின் கவன மெல்லாம் ரோமாபுரி மீது தான் பதிந்திருக்கும்.

இந்த வெற்றிகளுக்குக் காரணம் நேச நாட்டினர் திட்டமிட்ட முறையும் அத் திட்டத்தை நிறைவேற்றிய முறையுந் தான். இரண்டாவதாக, இந்தப் போராட்டத்தில் ஈடு பட்டிருந்த படையினரின் உயரிய போர்த் திறமையும் ஒரு காரணமாகும்.

ரோமாபுரிக்குப் போகும் வழியில் காஸினோ என்றொரு இடமிருக்கிறது. இதற்குப் போகும் வழிக்கு 6-வது பெருவழி யென்று பெயர். இங்கே ஒரு ஜெர்மன் பாரச்சூட் படை யிருந்தது. அது நன்கு தேர்ச்சிபெற்ற படை. என்றாலும், நேச நாடுகளின் 8-ம் படைகள் முன் போராட முடியாது தோற்றுப் போனது. அன்றியும் 'ராபிடோ' என்னும் ஆறு ஒன்று அங்கே ஓடுகிறது. அதன் அகலம் ஏறக்குறைய 40 கஜ மிருக்கும். இந்த ஆற்றில், கைதேர்ந்த இந்தியப் படையினர் கடும் போராடி, சான் ஆஞ்சிலோவைக் கைப்பற்றினார்கள். பிறகு காசினோ முதலிய பல ஊர்களைக் கைப்பற்றிக் கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். மொலெட்டா ஆற்றைக் கடந்து பிரிட்டிஷ் டாங்கிப் படைகள் வடக்கே போய் இறங்கி விட்டன. மேலும் முன்னேறிப் போய்க் கொண்டிருக்கின்றன. கிஸ்டெர்னாவிற்கு இடது புறமுள்ள ரயில்வே லைனை நேசப் படைகள் வெட்டி விட்டன. அதற்கு வலது புறமுள்ள 7-ம் நம்பர் பெருவழியையும் போய் அடைந்து விட்டன. அமெரிக்கப் படைகள் கிஸ்டெர்னாவுக்கு அரை மைல் தூரத்திலுள்ள அப்பியன் பெரு வழியை யடுத்துள்ள ஒரு பகுதியைக் கைப் பற்றின. அன்றியும் வெல்லெட்ரிக்குத் தெற்கே 4 மைல் தூரத்திலுள்ள, தாம் ஏற்கெனவே கைப்பற்றி யிருந்த இடத்தை யொட்டி, மேலும் கைப்பற்றினார்கள். நேசப் படைகள் டெர்ராசினாவைக் கைப் பற்றினார்கள். ஜெர்மானிய அரணின் வட திசையிலுள்ள கேந்திர ஸ்தானமானவற்றுள் முக்கியமானதான பைக்கோவை 5-ம் படையைச் சேர்ந்த பிரஞ்சுப் படைகள் கைப்பற்றின. கனடிய டாங்கிப் படைகள் லிரி பள்ளத் தாக்கு வழியாக மெல்பா ஆற்றங் கரையை யடைந்து விட்டன. மேலும் 5-ம் படையைச் சேர்ந்த அமெரிக்கப் பட்டாளங்கள் லெனோலா வென்னுமிடத்தைப் பிடித்துக் கொண்டு முன்னேறி, மாண்டி ஆல்டோ என்னும் மலை யுச்சியையும் கைப்பற்றி விட்டார்கள். இங்கு நடந்த போராட்டங்களில் மட்டும் இது வரை 7,000 ஜெர்மானியர்கள் போர்க் கைதிகளாகப் பிடிபட்டிருக்கிறார்கள். இந்த வெற்றிகளைக் குறித்து ஜெர்மனியே ஒப்புக் கொள்கிறது. ஆன்சியோ பகுதியில் நேச நாட்டு யுத்தக் கப்பல்கள் இடை விடாது நெருப்புக் குண்டுகளை வீசிக் கொண்டிருக்கின்றன. இவை மலை யுச்சிகளிலுள்ள ஜெர்மன் பாசறைகளைப் பாழாக்குகின்றன. எல்லாப் போர் முனைகளிலும் ஜெர்மானியர் தவிடு பொடி யாகின்றார்கள். இனி ஜெர்மானியர் பாடு அம்பலத்திற்கு வந்து விடுவது உறுதி.

# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

இத்தாலியில் பெரும் தாக்குதல் ஆரம்பமாகி விட்டது. இது இரண்டாவது போர் முனையின் அறிகுறி போலும். இந்தத் தாக்குதல் ஆரம்ப நாளன்று ஜெனரல் சர் ஹராலட் அலெக்சாந்தர் தன் படைகளுக்கு விடுத்த செய்தியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

"நேச நாடுகளின் விமான பலம் நாள் தோறும் ஓங்கிக் கொண்டிருக்கிறது. அவற்றின் தாக்குதல்களும் பெருகிக் கொண்டிருக்கின்றன. இதனால், ஜெர்மன் யுத்த முஸ்தீப்புகளை நொறுங்க ஆரம்பித்து விட்டன. கடலிலும், தரையிலும், ஆகாயத்திலும் போராடி, எதிரிகளை ஒரே மட்டமாக நொறுக்கும் பொருட்டு, கடைசிப் போராட்டத்திற்குச் சித்தமாக நேச நாட்டுப் படைகள் இப்போது திரண்டு கொண்டிருக்கின்றன. கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும், வடக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் நாஜிகளுக்கு அடிகள் விழப் போகின்றன. இதன் பயனாக நாஜிகள் அடியோடு அழிந்து போவார்கள். ஐரோப்பாவிற்கு மீண்டும் விமோசன முண்டாகும். நம் அனைவருக்கும் விரைவில் சமாதானம் ஏற்படும். முதலில் தாக்கும் பெருமை இத்தாலியிலுள்ள நமக்குத் தான் கிடைத்திருக்கிறது."

இந்த முதலடியே தகுந்த பலனளித்து விட்டது. மார்ஷல் கேசல்ரிங்கின் கஸ்டாவ் அரணில் பெரும் பிளவு கண்டு இப்போது அழிக்கப்பட்டு விட்டது. அடால் ஹிட்லர் அரணும் தகர்க்கப்பட்டு வருகிறது.

மேற்கே யிருந்து பெருந் தாக்குதல் எதிர்பார்க்கப் படுகிறது. ஐரோப்பாவை விடுவிக்கும் பொருட்டு பிரிட்டனில் நேச நாடுகள் செய்து வரும் ஆயத்தங்கள் முடிவடைந்து விட்டன. இரண்டாம் போர்முனை ஆரம்பமாகாதது பற்றி பலர் குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள். என்றாலும், எவ்வளவு கஷ்டப்பட்டாலும், ஆபத்துக்களுக் குள்ளானாலும் தாக்கத் தான் வேண்டு மென்று பிரிட்டிஷ் மக்கள் மிகுந்த ஆவலோடு தான் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

* * *

**இரண்டாம் போர் முனை : டன்கர்க்குக்குப் பிறகே முடிவு.**

1940-ம் வருஷத்திலேயே ஜெர்மானியர்களைத் தாக்கும் பொருட்டு ஐரோப்பாவிற்குப் போக வேண்டு மென்று பிரிட்டிஷ் மக்கள் உறுதி கொண்டார்கள். டன்கர்க்கைக் காலி செய்து திரும்பிய இரண்டு வாரங்களிலேயே இந்தத் தாக்குதல்கள் நிகழ்ந்தன. இவற்றிற்குத் தான் "கமாண்டோ" தாக்குதல்கள் என்று பெயர். அப்போது பிரஞ்சுக் கரையில் இறங்கித் தான் தாக்கினார்கள். அக்காலத்தில் எல்லா வசதிகளும் செல்வாக்கும் ஜெர்மானியர்களுக்கே இருந்தன. என்றாலும் பிரிட்டிஷார் கொஞ்சமும் மனத் தளர்ச்சி யில்லாமற் போராடினார்கள். இந்தப் பிடிவாதமும் ஊக்கமும் அக் காலத்திலேயே துலங்கின. 1940-ம் வருஷம் வேவல் பிரபு எகிப்திலிருந்தார். அவருக்கு 1940-ம் வருஷம் கோடை காலத்தில் டாங்கிகள் அனுப்பப்பட்டன. போர் விமானங்கள் குறைவுபடுங் காலத்தில், வெடிகுண்டு விமானங்கள் கட்டப்பட்டன. அவ்வளவு நம்பிக்கையும் மன உறுதியும் பிரிட்டிஷார் கொண்டிருந்தார்கள். இவை கட்டப்படுவது பற்றி, மிஸ்டர் சர்ச்சில், "அவசியமானால் பல வருஷங்கள் வரை தனிமையா யிருந்துங் கூடத் திட்டமிடுவோம்", என்று 1940-ம் வருஷம் ஜூன் மாதம் 4-ம் தேதி குறிப்பிட்டார். அதே மாதம் 18-ம் தேதி அவர் கூறியதாவது :—

"நம்மை வெல்வதானால், இந்தத் தீவிலேயே வெல்ல வேண்டும் ; அல்லது இந்தப் போராட்டத்தில் தோல்வியடையத் தான் வேண்டு மென்று ஹிட்லர் அறிவார். நாம் எதிர்த்து நிற்போமானால், ஐரோப்பா விடுதலை பெற முடியும். உலக மக்களின் வாழ்க்கையும் முன்னேற்ற மடையக் கூடும்."

பிரிட்டன் ஹிட்லரை எதிர்த்து நின்றது. மீட்சிப் போராட்டம் எப்போது ஆரம்பமாகுமோ வென்று ஐரோப்பாவில் அடிமைப் பட்டுள்ள மக்க ளெல்லோரும் ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆரம்ப கால முதல், தம் தீவையும் உயிரையும் பாதுகாத்துக் கொள்ளுவதை விட, எதிரிகள் வெடி குண்டுகளால் தாக்கிய போது அவர்கள் வெகு தீரத்தோடு போராடித் தடுத்தார்கள். ஜெர்மனி தன் விமானப் படையின் முழு பலத்தையுங் கொண்டு பிரிட்டனைத் தாக்குவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே, மிஸ்டர் சர்ச்சில் ஒரு தலைசிறந்த பிரசங்க மொன்று செய்தார். அதாவது 1940-ம் வருஷம் ஜூலை மாதம் 14-ம் தேதி "நாம் தனிமையாகவே போராடிக் கொண்டிருக்கிறோம் ; என்றாலும் நமக்காக மட்டும் நாம் போராட வில்லை" என்று அவர் கூறினார்.

ஒரு வருஷத்திற்குப் பிறகு, ஜெர்மனி வயப்பட்ட பெல்ஜியம், செக்கோஸ்லோவேகியா, க்ரீஸ், லக்ஸெம்பர்க், நெதர்லாந்துகள், நார்வே, போலந்து, யூகோஸ்லோவியா முதலிய அரசாங்கங்களின் பிரதிநிதிகளும், ஜெனரல் டிகாலின் சுயேச்சைப் பிரஞ்சு பிரதிநிதியும், 1941-ம் வருஷம் ஜூன் மாதம் 12-ம் தேதி லண்டனில் பிரிட்டிஷ் பிரதிநிதியையும் குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிகளையும் கலந்து பேசி, வெற்றி கிடைக்கும் வரை, ஜெர்மன் கொடுமைகளையும் இத்தாலியக் கொடுமைகளையும் எதிர்த்து, தொடர்ந்து போராட வேண்டு மென்று தீர்மானித்தனர்.

* * *

**ரஷ்யப் போருக்கு ஒரு வருஷத்திற்கு முன் தாக்குதல் யோசனை.**

பத்து நாட்களுக்குப் பிறகு ஒரு புதிய தோழர் வந்தார். ஜூன் மாதம் 22-ம் தேதி ஹிட்லர் ரஷ்யாவைத் தாக்கினார். இதனால், பிரிட்டனை இரண்டாவது முறையாகத் தாக்குவதற்கு இது அடிகோலுவதாகு மென்பது ஹிட்லருடைய எண்ணம். இதனால் ஜெர்மனியின் பலம் பிளவுபட்டது. என்றாலும் அதைப் பற்றி ஒரு பிரமாதமாக பிரிட்டன் கருதவில்லை. "இது நமக்கும் அமெரிக்காவுக்கும் ஆபத்தாகும்" என்று மிஸ்டர் சர்ச்சில் கூறினார். இந்தப் புதிய தோழரை பிரிட்டிஷ் மக்கள் வரவேற்றார்கள். இவர்கள் போராட்டத்தி லிறங்கியதற்குப் புதிய ஆழ்ந்த பொருளுண்டு. தான் ரஷ்யாவைத் தாக்கியது பற்றி பிரிட்டன் தன்னை பாராட்டி சமரசம் செய்து கொள்ள விரும்பும் என்று ஹிட்லர் நினைத்தார். அவருடைய நினைவில் மண் விழுந்தது.

"நாம் ஒரு போதும் பேரம் பேச மாட்டோம். ஹிட்லருடனாவது, அவரது கொள்ளைக் கூட்டத்தாரோடாவது நாம் ஒரு போதும் சமரசம் பேசமாட்டோம். அவருடன் தரையிலும், கடலிலும் ஆகாயத்திலும் கடவுள் அருளால் போராடுவோம். உலகத்தையே துன்பத்திற் குள்ளாக்கியவர்களிட மிருந்து அதை மீட்போம். அக் கொடுமைகளினின்று மக்களை மீட்போம்."

என்று மிஸ்டர் சர்ச்சில் கூறினார்.

ஜெர்மானியர் ரஷ்யாவைத் தாக்குவதற்கு ஒரு வருஷத்திற்கு முன்பிருந்தே, பிரிட்டிஷ் யுத்த தந்திரிகள் மனதிலும், பொது மக்கள் மனதிலும் ஒரு விஷயம் வேரூன்றி யிருந்தது. அதாவது எப்படியும் மீண்டும் ஐரோப்பாவில் போராட வேண்டும் என்னும் உறுதிப்பாடு தான். 1941-ம் வருஷம் ரஷ்யாவில் நிகழ்ந்தவை காரணமாக இரண்டாவது போர் முனையை பிரிட்டன் விரைவில் ஆரம்பிக்க வேண்டும் என்னும் கூக்குரல் பெருகியது. ரஷ்ய மக்களோடு திடீரெனத் தோழமையுணர்ச்சி பெருகியது. எதிரி தாக்குதல்களால் கொடுந் தொல்லைகளுக்கு உள்ளாகிய ரஷ்ய மக்களிடம் இவர்களுக்கு அனுதாபம் அதிகமானது. ரஷ்யத் தற்காப்புப் போராட்ட வீரத்தையும் உணர்ச்சியையும் பிரிட்டிஷார் பெரிதும் பாராட்டினார்கள். இதன் பயனாக பிரிட்டனை ஜெர்மன் விமானங்கள் தாக்குவதைக் கண்டு, இது ரஷ்யர்கள் கொடுத்த நன்கொடை என்று கருதினார்கள். "ரஷ்யாவிற்கு வந்துள்ள ஆபத்து நமக்கு வந்துள்ள ஆபத்து" என்று கருதினார்கள். கிழக்கே வெற்றி யுற்ற பிறகு, மேற்கே

(8-ம் பக்கம் பார்க்க)

# முக மலர்ந்து வழங்குவோர்

(சர் ஆர். டெனெஸ்டன் அவர்கள் ' மெட்ராஸ் வார் ரெவியு 'வுக்கு எழுதி யிருக்கும் கட்டுரையின் மொழி பெயர்ப்பு.)

அடிக்கடி புள்ளி விவரங்கள் பத்திரிகைகளில் வெளி வருகின்றன. ஒருவருடைய யுத்த முயற்சியின் அளவை இவை குறிக்கின்றன. கிரேட் பிரிட்டன், அமெரிக்கா, கானடா, இந்தியா ஆகிய நாடுகள் எத்தனை பவுன் ஷில்லிங் பென்சுகள், டாலர், ரூபாய் ஆகிய வற்றை யளித்தன வென்று குறிக்கிறது. யுத்த வரவு செலவு கணக்குகளைத் தெரிந்து கொள்ளும் நிலையை நான் கடந்து விட்டேன். குத்தகைக் கடன் தொகைக்கு இரண்டொரு சூன்யங்களைச் சேர்ப்பதுவோ, போரில் ஈடுபட்டிருக்கும் நாடுகளின் வரவு செலவுத் திட்டங்களோ தலையைக் கிறு கிறுக்க வைக்கின்றன. மிஸ்டர் சர்ச்சிலுடைய தந்தையாருங் கூட இந்தப் புள்ளிகளின் பொருள் விளங்காமல் திண்டாடிக் கொண்டிருந்தார் அல்லவா? இந்தத் தொகைகள் சோதிட எண்கள் போன்றவை. மனோ எல்லைக்கு அப்பாற்பட்டவை. இவை நம்மைத் திணரச் செய்கின்றன. நமக்கு நேர் முகமாகச் சம்பந்தப்பட்ட சாதாரணத் தொகையாயிருந்தால், நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளுவோம்.

இந்த 3 கோடி ரூபாய் இம் மாகாண வாசிகளின் தாராளத் தன்மையைக் குறிக்கிறது. அன்றியும் பல விஷயங்களை நமக்கு உணர்த்துகிறது. அதன் உண்மைத் தத்துவத்தை நாம் உணர, இது உதவுகிறது. அதாவது சென்னை கவர்னர் யுத்த நிதி இன்னும் உயரிய எல்லையையும் அடையும் என்று உணர்த்துகிறது. யுத்தச் செலவுகளைப் பற்றிய திட்டம் மாறுபடுகிறது. நாம் கொடுத்துள்ள தொகை இந்த யுத்தத்தை நடத்துவதற்கு தாராளமாகச் செலவு செய்தால் 3-மணி நேரத்திற்கும், பிடித்துச் செலவு செய்தால் 3½ மணி நேரத்திற்குந் தான் ஆகும்.

உறக்க மில்லாமையைப் போக்குவதற்குப் பல வகைகள் உண்டு. அவரவர் அன்று என்னென்ன செய்தார்களோ அந்த நுட்பங்களை யெல்லாம் சிந்தித்துப் பார்த்தல்; கோர்ட்டில் ஆஜராகாததனால் ஒருதலைப் பட்சமாகத் தீர்ப்புக் கூறப் பட்டதனால் நேர்ந்த மனக் கவலை; சிக்கலான வியாபாரப் பேச்சு; நேற்றிரவு நாம் கண்ட சினிமாக் காட்சி; எல்லைப்புறம் வரை நாம் செய்த மோட்டார் சவாரி; இன்று காலையில் நடை பெற்ற கூட்டத்திற்குப் போய் வந்ததனால் நேர்ந்த களைப்பு; இனி ஏற்படப் போகும் உழைப்பை முன்னிட்டு எடுத்துக் கொண்ட ஓய்வு; இவையெல்லாம் நம்மைத் தூங்கச் செய்கின்றன.

உறங்கச் செய்வதற்கு இவை எல்லாவற்றையும் விட மேலானதோர் முறையை நான் சொல்லக்கூடும். இந்த 4½ வருஷங்களாக இம்மாகாணத்திலுள்ள நாம், 3 அல்லது 3½ மணி நேர யுத்தச் செலவிற்கு மட்டுந்தான் கொடுத்து உதவியிருக்கிறோம். நீங்கள் உங்கள் பணத்தைக் கொடுக்கிறீர்கள். (இது முதலாவது அவசியமாகும்) பிறகு நீங்கள் எதை நினைக்கிறீர்களோ அந்த நினைவோடு தூங்கப் போகலாம். சென்னை வாசிகள் கொடுத்த தொகையைக் கொண்டு வாங்கப்பட்ட விமானங்கள் பெர்லின் மீது வெடி குண்டுகளை வீசுகின்றன. பிஸ்மார்க் கப்பலை மூழ்கடித்ததும் சென்னை டார்பிடோக்கள் தான். இந்த முக்கியமான பருவத்தில் இரண்டாவது போர்முனையும் ஆரம்பமாகிறது.

நமது பணம் வேறு வழிகளிலும் செலவு செய்யப்பட்டிருக்கிறது; ஆனால், ஆடம்பரமான முறையிலல்ல. அவ்வழிகள் நம் வாசகர்களுக்குத் தெரிந்த வழிகள்தான். 3 மணி நேரத்தில் பல நிகழ்ச்சிகள் நேரலாம். என்றாலும் நாம் உதவும் தொகையைக் கொண்டு 3 மணி நேரத்திற்கு அதிகமாகவும் போராடக் கூடும். இந்த உண்மையை இந்திய மக்களுக்கு யாரும் மறைக்க முடியாது.

தரைப் படையினருக்கும் கப்பற் படையினருக்கும் விமானப் படையினருக்கும் வசதி செய்து கொடுத்து உதவுவதிலும், யுத்தக் கைதிகளா யிருப்பவர்களின் துன்பங்களைப் போக்குவதிலும் சென்னை கவர்னர் யுத்த நிதி பயன்படுத்தப்படுகிறது. இவற்றை விட, தாம் செலவு செய்யத்தக்க நல்ல துறை வேறெதுவுமில்லை யென்று பணங் கொடுத்தவர்கள் ஒப்புக் கொள்ளுவார்கள். அவர்கள் நோக்கம் வேறு துறைகளில் இருந்தால், அந்தத் துறைகளைக் குறிப்பிட்டே தொகைகளை அனுப்பலாம். சென்னை கவர்னர் யுத்த நிதியின் நோக்கத்திற்கும் நேஷனல் டிபென்ஸ் கடன் கமிட்டியாரின் நோக்கத்திற்கும் தகராறுகள் ஏற்படக் கூடுமென்று அஞ்சிய காலமுமுண்டு. ஆனால் நல்ல வேளையாக, சென்னை மாகாண மக்கள் வெகு தாராளமாக உதவினார்கள். இரண்டு நிதிகளுக்கும் பணம் ஏராளமாக இடைவிடாது வந்து கொண்டே யிருந்தது. வேறு எல்லாவற்றையும்விட, இது, யுத்தத்தை நடத்துகிறவர்களுக்கு மிகுந்த திருப்தி யளிக்கும்.

# 3-வது சென்னைப் படையின் வீரச் செயல்கள்

இம்பாலுக்கு வட கிழக்கே டாமுவுக்குப் போகும் பாதையில் சிதா காடு என்றொரு மலை யிருக்கிறது. அங்கே ஒரு இந்தியப் படையின் ஒரு பகுதி இருக்கிறது. இந்தப் படையை பெரிய பீரங்கிகளைக் கொண்டும், மிஷின் பீரங்கிகளைக் கொண்டும், துப்பாக்கிகளைக் கொண்டும் ஜப்பானியர்கள் கடுமையாக 12 நாட்கள் இடைவிடாது போராடியும் பலிக்க வில்லை. ஆகவே வாய்ப் பறை முறையைக் கையாளத் தலைப்பட்டார்கள்.

நமது படைகள் இருப்பிடத்திற்கு 200 கஜ தூரத்திற் கப்பால், எதிரிப் பிரசாரகன் ஒருவன் காட்டிற்குள் மறைந்து கொண்டு, ஒரு பெரிய குழாயைக் கொண்டு வசவு மாலைகளையும் பயமுறுத்தல்களையும் பொழிந்தான். ஆனால், அவன் பேசியது உருது மொழி. நமது படையினரில் பெரும் பாலோருக்கு ஒரு வார்த்தை கூடத் தெரியாது. அவர்கள் அனைவரும் தமிழும் தெலுங்கும் மலையாளமும் பேசுகிறவர்கள். அந்தப் பிரசாரகன் நா வரளக் கத்தாதிருந்திருக்கலாம். இந்தப் பிரசாரகனுக்குக் கிடைத்ததென்ன? குண்டடி தான்.

அப்போதும், மற்ற சந்தர்ப்பங்களிலும் எதிரிகளோடு போராடிய தென்னிந்தியப் படையினர் தம் திறமையை மெய்ப்பித்திருக்கின்றனர். முற் கூறிய படைப் பகுதியினர் 3-வது சென்னைப் படையைச் சேர்ந்தவர்கள். சமீபத்தில் நடந்த தோர் போராட்டத்தில், இவர்கள் 150 ஜப்பானியர்களைக் கொன்று அவர்களுடைய வாள்களையும் கொடிகளையும் வீர விருதுகளாகக் கைப்பற்றினார்கள்.

எதிரியின் ரத்தத்தை உருஞ்சிய முதல் பட்டாளம் இது தான் என்று ஒரு இராணுவ நிபுணர் கூறினார். இந்தப் பட்டாளம் 1940-ம் வருஷம் பெங்களூரில் உருப் பெற்றது. 1941-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் அது ஒரு படையின் பகுதியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. முதன் முதலாக ஜப்பானியர்களோடு அது 1943-ம் வருஷம் டிசம்பர் மாதம் போராடியது. 4-மணி நேரத் தகவலின் பேரில் கிளம்பி 30 மைல் தூரம் கடந்து சென்று, யூ ஆற்றிற் கருகிலிருக்கும் டிலாங்வையாவிற் கருகில் பாசறை யமைத்துக் கொண்டது.

இந்தப் படைப் பகுதிக்குத் தலைவர் சுபேதார் மேஜர் சுடலைமுத்து. இவர் 15 வருஷ காலம் மாகாணப் படையிலும் 4 வருஷ காலம் இந்தப் பட்டாளத்திலும் சேவகம் செய்தவர். இதற்கு முன்பு இவர் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த கோவிற்பட்டி உயர்தரக் கலாசாலையில் உபாத்தியாயரா யிருந்தார். இந்தப் படை உத்தியோகஸ்தர்களில் மூன்றில் இரண்டு பங்குப் பேர்கள் சென்னைக்காரர்கள். மற்ற இந்தியப் படைகளில் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் பார்த்துவரும் வேலைகளை எல்லாம் இவர்கள் அங்கே பார்க்கிறார்கள்.

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

திரும்பி பிரிட்டனை ஹிட்லர் தாக்குவார் என்று அநேகர் நினைத்தார்கள். ஆகவே, ஹிட்லருடைய "படைகளெல்லாம் ரஷ்யாவில் போராடிக் கொண்டிருக்கும் போதே" உடனே ஐரோப்பாவை பிரிட்டன் தாக்க வேண்டு மென்று விவாதித்தார்கள். இரண்டு போர் முனைகளில் போராடுவதற்கு ஜெர்மானியர்கள் பரம் பரையாகவே பயப்படும் இயல்புள்ளவர்கள் என்றும் கூறினார்கள். அன்றியும் கோயரிங் 1939-ம்௵ செப்டெம்பர்௴ "இந்த முறை ஒரே போர் முனையில் தான் போராட்டம் நடைபெறும்; அது தான் இதில் முக்கியமான தோர் அம்சம்" என்று கூறியதையும் தம் கருத்துக்குத் துணையாகக் கொண்டார்கள். ஆரம்ப முதலே, இரண்டாவது போர் முனை ஆரம்பமாகுமா? என்னும் கேள்விக்கே இடமில்லை. எப்போது? எங்கே ஆரம்பமாகும் என்னும் கேள்விகள் தான் கேட்கப்பட்டு வந்தன.

* * * *

**ஐரோப்பாவை ஏன் தாக்கக் கூடாது.**

"ரஷ்யாவுக்குள்ள பெரும் கஷ்டத்தைக் குறைக்க வேண்டி ஐரோப்பாவைத் தாக்க வேண்டுமா என்னும் பிரச்சினையை 1941-ம்௵ செப்டெம்பர்௴ 30௳ மிஸ்டர் சர்ச்சில் குறிப்பிட்டார். என்றாலும் பல காரணங்களை முன்னிட்டு ஐரோப்பா மீது படை யெடுப்பது பற்றி சிந்திக்கக் கூடவில்லை. முதன் முதலாக பிரிட்டனைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அது தான் இந்த யுத்தத்தின் முக்கியமான தளம். இரண்டாவதாக, பிரிட்டன் நன்மையை முன்னிட்டும் ரஷ்யாவின் நன்மையை முன்னிட்டும் சூயெஸ் கால்வாயையும், மத்தியக் கிழக்கு நாடுகளையும் நேச நாடுகள் கைப்பற்றிக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமா யிருந்தது. மூன்றுவதாக பெருந் தாக்குதல்களைச் சமாளிக்கத்தக்க கப்பல் பலம் பிரிட்டனிடம் அப்போது கிடையாது. கடைசியாக ஜெர்மனியை விட மேலான விமான பல மிருந்தாலல்லது பிரிட்டன் ஜெர்மனி மீது படையெடுக்க கிளம்புவது முட்டாள்தனமாக முடியு மென்று தெளிவாகத் தெரிந்தது.

இந்தக் காரணங்களெல்லாம் ஒரு புரமிருக்க, ஐரோப்பாவைத் தாக்கினால், கட்டாயம் வெற்றி பெற வேண்டும். தாக்குவதைத் தள்ளிப் போடுவதனால் பிரிட்டனுக்கும் ரஷ்யாவுக்கும் நேரக் கூடிய தீமையைவிட, உடனடியாகத் தாக்குவதனால் பெருந் தீங்கு நேரக் கூடும். இந்தத் தாக்குதலுக்குத் தீவிரமாக ஆயத்தம் செய்து கொண்டிருந்தால், ஹிட்லரோடு போராடுவதற்காக ரஷ்யாவுக்கு அனுப்பப்படும் மிகச் சிறந்த தளவாடங்களும் சப்ளைகளும் தொடர்ச்சியாகப் போய்ச் சேர முடியாது தடைப் படும்.

அப்போதே இரண்டாவது போர் முனையை ஆரம்பித் திருக்க வேண்டு மென்று கூறுவது தவறு என்பதற்கு மேலும் இரண்டு காரணங்களுண்டு. இரண்டு போர்முனைகளில் போராடக் கூடாது என்பது ஜெர்மானியரின் பரம் பரைச் சித்தாந்தமாக விருந்த போதிலும், பல போர் முனைகளை ஆரம்பிக்க ஹிட்லர் கொஞ்சமும் தயங்கவில்லை. ஹிட்லர் தன் கவனத்தை யெல்லாம் ரஷ்யப் போராட்டத்திலேயே செலுத்திக் கொண்டிருக்கிறார்; ஆகவே, மேற்கே பின்புறமிருந்து தாக்கினால் போதும் என்ற கருத்தும் திருத்தப்பட வேண்டும்.

**மற்றொரு தோழர்: சர்ச்சில் வாக்கு பலித்தது.**

1941-ம்௵ ஒரு புதிய பலமிகுந்த தோழர் போரில் இறங்கினார். பெர்ல் துறைமுகத்தை ஜப்பானியர்கள் தாக்கியதனால், அமெரிக்கர்கள் போரில் இறங்க வேண்டியதாயிற்று. டன்கர்க்கை விட்டு பிரிட்டிஷ் படைகள் காலி செய்த பிறகு 1940-ம்௵ ஜூன்௴ 4௳ மிஸ்டர் சர்ச்சில் கீழ்க் கண்டவாறு கூறினார்:—

"பழமையை மீட்டுக் காக்கும் பொருட்டு ஒரு புதிய உலகம் தன் முழு பலத்தோடும் வருகிற நல்ல காலம் பிறக்கும் வரையிலும், பிரிட்டனும் சாம்ராஜ்ய நாடுகளும் போராட்டத்தை நடத்திக் கொண்டே யிருக்கும்."

1942-ம்௵ ஜெனரல் மார்ஷல் பிரிட்டனுக்கு வந்தார். போராட்டம் பற்றி இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. மேற்கு ஐரோப்பாவில் பிரிட்டிஷ் விமானத் தாக்குதல்கள் பலமாக நடந்தன. இரண்டாம் போர் முனையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்று கூறுகிறவர்கள் மீண்டும் முன் வந்து வற்புறுத்தினார்கள். ஆறு மாதங்களுக்கு முன்பிருந்த நிலைமையை விட அப்போதிருந்த நிலைமை இரண்டாம் போர் முனையை ஆரம்பிக்கக் கூடாது என்பதற்கு அரண் செய்வதா யிருந்தது. அதற்கான பருவம் இன்னும் வரவில்லை. ஏனென்றால் ரஷ்யாவுக்கும் எகிப்துக்கும் முக்கியமான சப்ளைகள் போக வேண்டி யிருந்தது. தூரக் கிழக்குப் போர் முனையில் போராட்டத்தைத் தாமதப் படுத்தும் முறையையே கையாண்டு கொண்டு வந்தார்கள். ஏனென்றால் யுத்தத்திற்காகத் தம் பலத்தைத் தகுந்தபடி அமெரிக்கா அமைத்துக் கொண்டிருக்க வில்லை.

* * * *

**டோப்ருக்கிலிருந்து டேரானுக்கு: சமயம் நெருங்குகிறது.**

1942-ம்௵ ஜூன்௴ டோப்ருக் பிடிபட்டது. அப்போது இரண்டாவது போர் முனை முதலிய விஷயங்களைக் குறித்து அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட்டுடன் மிஸ்டர் சர்ச்சில் அமெரிக்காவில் கலந்து பேசிக் கொண்டிருந்தார். அப்போது தான் அச்சு நாட்டாரை ஆப்பிரிக்காவிலிருந்து விரட்டியடிப்பதற்கான வழி கோரப் பட்டது. கோப்பல்ஸ் இரண்டாம் போர் முனையைக் குறித்து நையாண்டி செய்து கொண்டிருந்தார். ஆனால் ஆகஸ்டு மாதத்தோடு அச்சு நாட்டாரின் ஆனந்த கோஷம் அற்று விட்டது. ஏனென்றால், அது முதல் எல்லாப் போர் முனைகளிலும் நேச நாட்டுப் படைகள் முன்னேற ஆரம்பித்தன. ஜூன் மாதம் இங்கிலாந்துக்கும் சோவியத் ரஷ்யாவுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டது. பிரிட்டனுக்கும், அமெரிக்காவுக்கும் சோவியத் ரஷ்யாவுக்கும் நல்லுறவு ஏற்பட்டது. "1942-ம் வருஷம் ஐரோப்பாவில் இரண்டாம் போர் முனையை ஆரம்பிப்பதைக் குறித்து இம் மூன்று நாடுகளுக்குள்ளும் ஒற்றுமை ஏற்பட்டது. அதன் பயனாக ஸ்டாலின் கிராடும் காக்கஸஸும் காப்பாற்றப் பட்டன. அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலிருந்தும் மத்தியதரைக் கடலிலிருந்தும் வட ஆப்பிரிக்காவில் ஆங்கிலோ-அமெரிக்கப் படைகள் இறங்கியதை யொட்டித் தான் சிசிலியிலும் இத்தாலியிலும் இப்படைகள் இறங்க முடிந்தது. அடுத்தபடியாக டேஹரானில் 1943-ம் வருஷக் கடைசியில் ஒரு மகா நாடு நடந்தது. அப்போது இரண்டாம் போர் முனையைக் குறித்து பூரணமாக ஆலோசித்து முடிவு கட்டினார்கள்.



அரக்கான் போர் முனையில் தம் படைகள் வந்திறங்குவதைக் கவனித்துக் கொண்டிருக்கிறார் இந்திய கப்பற்படை காப்டன் ஜே. ரைலாண்ட்.

அப்போது, தாக்கும் சமயம் நெருங்கி விட்டதென்றும், தம்மைத் தாக்குவதற்கு நேச நாடுகள் செய்த ஏற்பாடுகளெல்லாம் முடிவாகி விட்டன வென்றும் ஒரு உயரிய ஜெர்மன் உத்தியோகஸ்தர் கூறியதாக ஜெர்மன் ஆதிக்கத்திற் குட்பட்ட பாரிஸ் வானொலி நிலையம் கூறியது. அன்றியும் இந்த வேனிற் காலத்திலேயே இந்த யுத்தத்தின் முடிவு தெரிந்துவிடு மென்றும் அவர் கூறினாராம். இதன் பயனாக, இது வரை இல்லாதபடி பெருங் குழப்பம் அச்சு நாடுகளில் ஏற்பட்டிருக்கிறது.

# மாண்டவன் மீண்ட காதை

## இந்திய யுத்தக் கைதிகளை ஜப்பானியர் நடத்தும் முறை

### வேவு பார்க்க அனுப்பப்பட்டவர் வெளி யிடும் விவரங்கள்

ஜப்பானியர்களால் வேவு வேலை செய்யும்படி அனுப்பப்பட்டு இந்தியா வந்து சேர்ந்த 12 பேர்களில் ஒருவரான ஜமேதார் மகமத் ஈசுப் கான் மே மாதம் 21-ம் தேதி டில்லி அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து ஒலி பெருக்கிய உருது சொற்பொழிவின் மொழி பெயர்ப்பு வருமாறு :—

**இரண்டு வருஷங்களுக்குப் பிறகு இன்று தான் என் அருமைத் தாய் நாட்டில் என் நண்பர்களோடு பேசிக் கொண்டிருக்கிறேன். சென்ற இரண்டு வருஷங்களாக நான் ஜப்பானியர்களிடம் யுத்தக் கைதியா யிருந்தேன். அப்போது துன்பமும் துயரமுந் தான் அனுபவித்தேன். மீண்டும் என் சொந்த நாட்டிற்கு நான் வந்து சேர்ந்தவுடனே இருண்ட கல்லறைக் குழியினின்று இனிய உலகத்திற்கு வந்ததாகக் கருதுகிறேன். இந்த உலகில் வாழ்வும் சுயேச்சையும் மிளிர்கிறது.**

மாண்டவன் மீண்ட காதையை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். மார்ச்சு மாதம் 25-ம் தேதி காலை 9-மணிக்கு பாஸ்லி என்னு மிடத்தில் 'கான்வஸ்' படகுகளில் நாங்கள் வந்திறங்கினோம். கடற்கரையிலுள்ள மணலில் எங்கள் படகுகளைப் புதைத்து விட்டு நாங்கள் ஊரை நோக்கிப் போனோம். அந்த ஊர் ஜமீன்தாரைக் கண்டோம். எங்கள் காதையை அவரிடம் சொன்னோம். ஜப்பானியர்களால் நாங்கள் இந்தியாவுக்கு அனுப்பப் பட்டோம். ஆனால், ஜப்பானியர்கள் விரும்பியபடி செய்ய வேண்டு மென்னும் எண்ணம் எங்களுக்குக் கொஞ்சமுங் கிடையாது. நாங்கள் வந்திருப்பதைக் குறித்து இராணுவ அதிகாரிகளுக்கு அறிவிக்கும்படிக் கோரினோம். ஜப்பானியர்கள் எங்களுக்குக் கொடுத்திருந்த 6 சுழற் துப்பாக்கிகள், வெடி மருந்துகள், வற்றல் உணவுகள், இரண்டு தந்தி யில்லாக் கம்பி செட்டுகள் ஆகியவற்றை நாங்கள் அவருக்குக் காட்டினோம். கம்பியில்லாத் தந்தி செட்டுகளில் ஒன்று ஒரு வாளியிலும், மற்றொன்று உக்காவிலும் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது. எங்களுக்கு அவர்கள் கொடுத்திருந்த பணத்தையும் அவரிடம் காட்டினோம். எங்கள் ஒவ்வொருவர் வசமும் ரூ. 900 இருந்தது. அன்றியும் ஆயிரக் கணக்கான விலை மதிப்புள்ள வைரங்களும் எங்களிடம் கொடுத்திருந்தார்கள். ஜமீன்தார் எங்களுக்கு உணவளித்து இச்செய்தியை கராச்சிக்குத் தெரிவித்தார். மறு நாள் ஒரு மேஜர் கராச்சியிலிருந்து வந்து எங்களை கராச்சிக்கு அழைத்துக் கொண்டு போனார். அங்கிருந்து நாங்கள் டில்லிக்கு வந்து சேர்ந்தோம். இது தான் என் காதை. துன்பக் காதையின் இன்ப இறுதி.

#### பழைய காதை

பழைய காதையையும் நான் ஆரம்ப முதல் சொல்ல வேண்டும். 1942-ம் வருஷம் பிப்பிரவரி மாதம் 15-ம் நாள் ஒரு முக்கியமான நாள். அன்று தான் ஜப்பானியர்கள் எங்களை யுத்தக் கைதிகளாகப் பிடித்தார்கள்.

நான் 6-வது காலாட் படையைச் சேர்ந்த போக்கு வரவு கம்பெனியில் சேர்ந்திருந்தேன். அந்தக் கம்பெனியிலிருந்தவர்களை ஜப்பானியர்கள் பிடித்து பல் வேறு சிறை முகாம்களுக்கு அனுப்பினார்கள். என்னையும் இன்னும் சிலரையும் பிடடாரி சிறை முகாமுக்கு அனுப்பினார்கள். அங்குள்ள கைதிகளுக்கு சப்ளையும் உணவும் வழங்கப்படுவதை மேற் பார்க்கும் வேலை எனக்கு விதுக்கப்பட்டது. இந்தச் சிறை முகாம்களை ஜப்பானியக் காவல் வீரர்கள் கடுமையாகக் காத்துக் கொண்டிருந்தார்கள். ரோடுகளிலும், விமான நிலையங்களிலும் வேலை செய்வது, இடிந்து போன கட்டடங்களின் கற்கள் முதலிய வற்றை அப்புறப்படுத்துவது, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு கனமான பாராங் கற்களைத் தூக்கிக் கொண்டு போவது முதலிய கடுமையான வேலைகளுக்கு ஆட்கள் தேவைப்படும் போது மட்டுந் தான், இந்தச் சிறைகளிலிருப்பவர்கள் வெளியே கொண்டு போகப்படுகிறார்கள். ஒரு நாளில் ஓய்வில்லாமல் 9-மணி நேரம் கடுமையாக உழைக்க வேண்டும். மிக மிகக் குறைந்த அளவு உணவு தான் கொடுக்கிறார்கள். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு நாங்கள் இருந்த சிறைப் படைத் தலைவர் எங்களுக்கு சற்று அரிசியும் கோதுமை மாவும் தரும்படி ஏற்பாடு செய்தார். அரிசியோ, நொய்யும் மாவுந்தான். கோதுமை மாவோ, பாதிக்கு மேல் தவிடு தான். உப்போ, மிளகாயோ, மற்ற காரமோ கிடையாது. நிலைமை மிகவும் மோசமாகிவிடவே, ஏதேனும் நன்மை யுண்டாகும் என்னும் நம்பிக்கை யோடு, ஜப்பானியர்களிடம் ஆட்சேபித்தோம். ஆனால், அவர்கள் அதை அலட்சியம் செய்தார்கள். அவர்கள் கூறுகிறபடி நாங்கள் நடக்கும்படி செய்ய ஜப்பானியர்கள் எல்லா வகைகளிலும் இதமாகச் சொன்னார்கள். ஆசிய விடுதலை யென்று சொல்லி நமக்கு பல வகைகளிலும் ஆசை காட்டினார்கள். தமது தந்திரம் பலிக்காமற் போனால், இம்சை செய்ய ஆரம்பிக்கிறார்கள்.

#### யுத்தக் கைதிகளின் நிலைமை

ஒவ்வொரு யுத்தக் கைதியும் படையில் சேரும்படி கோரப்படுகிறார். யாராவது சேர மறுத்தால் 'கான்சென்ட்ரேஷன்' சிறை வாசந் தான் கிடைக்கிறது. அங்கே விலங்கிட்டு கொடூரமாய் அடிக்கிறார்கள். மிக அசுத்த மான உணவே அளிக்கப்படுகிறது. இதன் பயனாக வயிற்றுக் கடுப்பு முதலிய கொடிய நோய்களுக்கு அவர்கள் ஆளாக நேருகிறது.

ஜப்பானியர்கள் செய்யும் கொடுமைகள் பொறுக்க மாட்டாமல் யுத்தக் கைதிகள் கலவரங்கள் செய்வதுமுண்டு. அடுத்துள்ள ஒரு சிறை முகாமில் கலவரம் நடப்பதாகச் செய்தி வந்தது. கொஞ்ச நேரத்திற் கெல்லாம் யுத்தக் கைதிகளா யிருந்த இந்திய உத்தியோகஸ்தர்களையும் சிப்பாய்களையும் 'கான்சென்ட்ரேஷன்' சிறைக்கு அனுப்பியதாகத் தெரிய வந்தது. யுத்தக் கைதிகள் முகாம்களில் இப்படிப்பட்ட கலவரங்கள் நிகழ்வது சகஜம். வாரந் தோறும் பல முறை துப்பாக்கிப் பிரயோகங்கள் நடக்கும்.

நான் "பிடடாரி" முகாம் சிறையில் 6 மாத காலம் இருந்தேன். அப்போது, திக்கற்ற எங்களை ஜப்பானியர் படுத்திய கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகப்பட்டன. ஒரு விஷயத்தை மட்டும் நான் கவனித்தேன். யாராவது அவர்களுக்கு இணங்கி நடப்பார்களானால், தாம் மீண்டும் இந்தியா போய்ச் சேர வழி பிறக்கும் என்னும் நம்பிக்கை யோடு தான் அப்படிச் செய்தார்கள். பிறகு "பிடடாரி" சிறையிலிருந்து "சலேகிடர்" முகாம் சிறைக்கு என்னை மாற்றினார்கள்.

#### விசேஷ வேலைக்கு ஆட்கள்

அங்குள்ள யுத்தக் கைதிகள் தம் நாட்டிற்குக் கெட்ட பெயர் தேடித் தந்து ஜப்பானியர்களின் கையாட்களாக மாறுவதை விட, எல்லா வகைத் துன்பங்களையும் முக மலர்ச்சியோடு அனுபவிக்கிறவர்கள். இந்தச் சிறைக்கு நான் வந்து ஒரு வாரங் கூட ஆகவில்லை. விசேஷ வேலைகளுக்கு ஆட்களைப் பொறுக்கி எடுக்கும் பொருட்டு ஒரு மேஜர் எங்கள் சிறைக்கு வந்தார். எதிரி கைகளினின்று தப்பிக் கொள்ளுவதற்குக் கடவுளே கொடுத்த தோர் சந்தர்ப்ப மென்று நான் அதை எண்ணினேன். ஆகவே, அந்த

விசேஷ வேலை செய்ய நானுகவே முன் வந்தேன்.

வேவு பார்க்குந் தொழிலுக் கென்று பொறுக்கி எடுக்கப் பட்ட சில முஸ்லீம் களோடு என்னையும் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். எங்கள் அனைவரையும் பிணுங்குக்கு அனுப்பினுர்கள். அங்கே, பிரசாரம், நீந்துதல், பட கோட்டுதல் முதலிய துறைகளில் பயிற்சி யளிக்கப் பட்டோம். பிறகு சுபாஷ் போஸ் எங்களைத் தனித் தனியாகக் கண்டார். இந்திய முஸ்லீம்களுக்கு நிலைமையை எப்படி எடுத்துச் சொல்ல வேண்டு மென்று போதித்தார். சில நாட்களுக்குப் பிறகு, நாங்கள் சிங்கப்பூருக்குப் போக வேண்டு மென்று கட்டளை பிறந்தது. அங்கே 2 மாதங்கள் இருந்தோம். பிறகு மேலும் 20 பேர்களைப் பொறுக்கி எடுத்து, அவர்களையும் எங்களுடன் பிணுங்குக்கு அனுப்பினுர்கள். இங்கே மேலும் எங்களுக்குப் பயிற்சி யளிக்கப்பட்டது. எங்களில் 12 பேர்களை மட்டும் இந்தியாவில் வேவு பார்க்கும் வேலைக் கென்று நியமிக்கப் பட்டோம். 1944-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 27-ம் தேதி காலை நாங்கள் இந்தியாவுக்குக் கப்பல் ஏறினேம். எங்கள் பிரயாணம் பெரும் ஆபத்துக்களுக்கு உள்ளானதா யிருந்தாலும் நாங்கள் இந்தியாவுக்குத் திரும்புகிறேம் என்பது பற்றி பெரு மகிழ்ச்சி கொண்டோம்.

**நீர் மூழ்கிக் கப்பல் தலைவர்**

நாங்கள் ஏறிவந்த நீர்மூழ்கிக் கப்பலின் தலைவர் ஒரு சமையற்காரரைப்போல் தோன்றினுரே யொழிய, உத்தியோகஸ்தரைப் போல் தோன்றவில்லை. மகா குள்ளர். ஒளிமிக்க கண்கள். நீண்ட பற்கள், கழுத்தைச் சுற்றி ஒரு சிறு துண்டு. அவர் அணிந்திருந்த சட்டையில் பாதி கால் சட்டைக்குள்ளும், பாதி வெளியிலுமிருந்தது பல நாட்களாகக் கழுவப் படாத முகமாகத் தோன்றியது. மிஸ்டர் முசாகா ஒரு நீர்மூழ்கிக் கப்பல் தலைவர் என்பது எனக்கு முன்பே தெரிந்திராதிருந்தால், அவர் ஒரு கப்பல் தலைவர் என்று நம்பியே இருக்க மாட்டேன். அவர் தொப்பியில் காணப்பட்ட இரண்டு கோடுகள் மட்டுந் தான் அவருடைய பதவியின் சின்னங்களாய் இருந்தன. அந்தக் கோடுகளும் அழுக்குப் படிந்திருந்தன. நாங்கள் பேசிய மொழி அவர்களுக்குத் தெரியாது ; ஆகவே அவரை நாங்கள் நையாண்டி செய்வது எளிதா யிருந்தது. நாள்தோறும் எங்கள் தாய் நாட்டை அணுகிக் கொண்டிருந்தோம். இரவு தோறும் திசைக் கருவியைப் பார்த்துக் கொண்டே இன்னும் நம் நாடு எவ்வளவு தூரத்தி லிருக்கிற தென்று கணக்கிட்டுக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் அந்த நீர்மூழ்கிக் கப்பலிலிருந்த ஜப்பானியர்கள் ஒரு விருந்து நடத்தினுர்கள். அதற்கு எங்களையும் அழைத்தார்கள். எங்களுக்குப் பன்றி இரைச்சியைச் சமைத்து பரிமாறப்பட்டதைக் கண்டு ஆச்சரியமும் ஆத்திரமுங் கொண்டோம். நாங்கள் இதை ஆட்சேபித்து உண்ண மறுத்து விட்டோம். இதைக் கேட்டு அந்த ஜப்பானியர்கள் கோபம் கொண்டார்கள். "நீங்கள் இந்தியா போய்ச் சேர்ந்தவுடனே இப்படிப்பட்ட மூடக் கருத்துக்கள் ஒழிந்து விடும்" என்று சொன்னுர்கள்.

கடைசியாக மார்ச்சு மாதம் 16-ம் தேதி இரவு 10-55 மணிக்கு நமது கரையையடுத்து எங்கேயோ வந்து சேர்ந்தோம். அவர்கள் இரண்டு படகுகளைக் கடலில் இறக்கினுர்கள். அவற்றுள் ஒன்று கவிழ்ந்து விட்டது. மறு நாள் இரவு மறுபடியும் கரை சேர முயற்சித்தோம். அப்போது, மற்ற படகும் சேதமடைந்தது. ஆகவே, யாராவது மீன் படகுக்காரர்களைப் பிடித்துக் கொன்று, அவர்களுடைய படகை உபயோகிக்க வேண்டு மென்று மிஸ்டர் முஸாகா கூறினுர். இக்கொடுஞ் செயலுக்கு நாங்கள் இசையவில்லை. ஒரு வாரங் கழிந்தது. படகுகள் பழுது பார்க்கப்பட்டன. அவற்றில் ஏறி பாஸ்னி வந்தடைந்தோம். இந்திய மண்ணில் இறங்கியவுடனே எங்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் கண்ணீர் பெருக ஒருவரை யொருவர் தழுவிக் கொண்டோம்.

# "ஜப்பானை நோக்கித் தொழ வேண்டுமாம்"

## உணவில்லாமல் கடும் உழைப்பு

### தந்திரத்தால் தாய் நாடு திரும்பிய யுத்தக் கைதி

**சமீபத்தில் ஒரு ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பலினின்று இறங்கி இந்தியா வந்து சேர்ந்த 12 பேர்களில் ஒருவரான டெக்னிகல் வாரண்ட் ஆபீசர் அசல் நூர்கான், ஐ.ஏ.ஒ.சி., உருது மொழியில் டில்லி அகில இந்திய வானெலி நிலையத்திலிருந்து மே மாதம் 22-ம் தேதி ஒலி பரப்பிய சொற்பொழிவின் மொழி பெயர்ப்பு வருமாறு:—**

இன்று என் சொந்த நாட்டி 'லிருந்து பேசக்கூடிய நிலைமையி லிருப்பது பற்றி நான் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். ஜப்பானியர்களோடு போர் ஆரம்பமாவதற்கு 2 மாதங்களுக்குமுன்பு நான் ஈப்போவில் (மலேயா) இருந்தேன். 1941-ம் வருஷம் டிசம்பர் மாதம் 8-ம் தேதி என் படை ஈப்போவி லிருந்து ஜட்ராவிற்குப் போராடும் பொருட்டு அனுப்பப் பட்டது. எங்கள் படையுடன் 20-வது இந்தியக் காலாட் படையும் அனுப்பப்பட்டது. 2 மாதங்கள் நாங்கள் போராடினேம். பிப்ரவரி மாதம் 15-ம் தேதி சிங்கப்பூர் வீழ்ந்தது. நாங்க ளெல்லாம் கைதிகளானேம். என் படையினின்று என்னைப் பிரித்து ஒரு தொழிற்சாலைக்கு அனுப்பினுர்கள். பிறகு, மற்றப் படைகளுடன் எங்களையும் நைசாம் முகாம் சிறைக்கு அனுப்பினுர்கள்.

**சுண்ணும்பு கலந்த அரிசி**

இரண்டு நாட்கள் வரையில் கொஞ்சம் பிஸ்கோத்துகளைத் தவிர வேறு எவ்வகை உணவும் வழங்கப்படவில்லை. இது கொஞ்சமும் எங்களுக்குப் போதவில்லை. நாங்கள் உயிர் வாழ்வதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை. 500 பேர்கள் வசிக்க முடியாத இடத்தில் 19,000 பேர்களை அடையச் செய்தார்கள். இரண்டு நாட்கள் கழித்துத் தான் உணவுப் பொருட்கள் வந்தன. அந்த அரிசியோடு சுண்ணும்பும் கலந்திருந்ததனுல், வயிற்றுக் கடுப்பு நோய் அனைவருக்கும் ஏற்பட்டது. நோயாளிகளைக் குணப்படுத்துவதற்கு எவ்வித ஏற்பாடும் அங்கே கிடையாது. ஆகவே, ஒவ்வொருவராக மாண்டார்கள். போர் முனையில் மாண்ட இந்தியப் படையினரை விட, இந்தச் சிறைகளில் ஜப்பானியர்கள் பராமரிக்காததனுல் மாண்டவர்களின் எண்ணிக்கை அதிகமிருக்கு மென்று நினைக்கிறேன்.

இந்திய யுத்தக் கைதிகளை மகா கொடுமையாக ஜப்பானியர்கள் நடத்தினுர்கள். ஒரு சாதாரண ஜப்பானிய சிப்பாய் கூட, ஒரு இந்திய உத்தியோகஸ்தரை மிகவும் அலட்சியமாகத் தான் நடத்துகிறுர். அவர் அந்த உத்தியோகஸ்தர் தப்பிதம் செய்ததாகத் தானுகவே நினைத்துக் கொண்டு, கன்னத்தில் அறைவார். எமது சொந்தப் பொருட்கள் எல்லாவற்றையும் ஜப்பானியர்கள் பிடுங்கிக் கொண்டார்கள். எங்கள் கடிகாரங்களை எடுத்துக் கொண்டு எங்களை அடித்தார்கள்.

**உணவில்லாமல் கடும் வேலை.**

காலை 8 மணிக்கு எங்களை லாரிகளில் ஏற்றிக் கொண்டு போய் நாள் முழுதும் கடுமையாக வேலை செய்யும்படி நிர்ப்பந்தித்தார்கள். யாராவது வேலை கடுமையாயிருக்கிறது என்று சொன்னுல், ஜப்பானியர்கள் அவர்களை இம்சைப் படுத்தினுர்கள். காலையில் எங்களுக்கு உணவே கொடுக்கப்படுவதில்லை. இந்திய யுத்தக் கைதிகளை மகா கொடுமையாக ஜப்பானியர்கள் நடத்துகிறுர்க ளென்று அனைவருக்கும் தெரியும். எனக்கு மற்ற சிறை முகாம்களையும் காணச் சந்தர்ப்பங் கிடைத்தது. எல்லாச் சிறைகளிலும் இந்தியர்களை மகா கடுமையாகவே ஒன்று போல ஜப்பானியர்கள் நடத்துவதை நான் கண்டேன்.

**கொடுமைகளுக்குத் தப்ப வழி.**

நாம் எதிரிகளின் கொடுமைகளுக்குத் தப்ப வேண்டுமானுல், அவர்களோடு ஒத்துழைக்க நாம் மிகுந்த ஆவலோடிருப்ப

தாகப் பாவனை செய்ய வேண்டும். நான் ஜப்பானியர்களுக்கு மிகவும் சாதகமானவனைப் போல அவர்களுடன் பேச ஆரம்பித்தேன். ஆகவே, என் பெயரையும் அவர்கள் ஜாபிதாவில் தாக்கல் செய்து கொண்டார்கள். செப்டம்பர் மாதம் நாங்கள் பிணுங்கு வந்து சேர்ந்தோம். ஒரு வருஷம் பயிற்சி பெற்றோம்.

**கடவுளைத் தொழவும் உரிமையில்லை.**

பயிற்சிசாலையில், கடவுளைத் தொழக் கூட நேரம் கிடைக்காது. ஈத் திருநாள் வந்தது. மைதானத்தில் நாங்கள் தொழும் பொருட்டுக் கூடி யிருந்தோம். அப்போது ஒரு ஜப்பானிய உத்தியோகஸ்தர் அங்கே வந்து, தம் அரச மாளிகையுள்ள திசையை நோக்கித் தொழ வேண்டுமென்று நிர்ப்பந்தித்தார். இதை விட ஒரு முஸ்லீமுக்கு கோபமூட்டக் கூடியது எது இருக்கமுடியும்? என்றாலும் நாங்கள் ஒன்றும் செய்யக் கூடவில்லை. எங்களில் ஒருவர் தொழுது கொண்டிருந்தார். ஒரு ஜப்பானிய சிப்பாய் அவரை அணுகி கழுத்தைப் பிடித்து நெறித்து வெளியே இழுத்துக் கொண்டு போனார். பிறகு அவரை நையப் புடைத்ததாக பிறகு நாங்கள் தெரிந்து கொண்டோம். அவர் செய்த குற்றந் தான் என்ன வென்று கேட்ட போது, அவர் மேற்கு நோக்கித்தொழுது கொண்டிருந்தார் என்று அந்த ஜப்பானியர் கூறினார். எங்களுடைய முக்கியமான எண்ண மெல்லாம் எப்படியாவது இந்தியாவுக்குப் போய்ச் சேரவேண்டு மென்பது தான். ஜப்பானியர்கள் சூழ்ச்சியினின்று தப்புவதற்குத் தக்க தருணத்தை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். எங்கள் அனைவருக்கும் ஒரு அம்சம் பொதுவா யிருந்தது. அதாவது, எங்கள் உண்மையான நோக்கத்தை ஜப்பானியர்கள் எங்கு கண்டு கொள்ளுவார்களோ என்ற பயம் எங்கள் எல்லோருக்கும் இருந்தது. இது அவர்களுக்குத் தெரிந்து விடுமானால், எங்கள் எண்ணம் ஈடேறுவதற்கே இடமில்லாமற் போய் விடும். ஆகவே, ஜப்பானியர்களோடு நாங்கள் எல்லா வகைகளிலும் ஒத்திருப்பது போலவே நடந்து வந்தோம். அப்படி யிருந்தும், எங்களை சந்தேகத்தோடேயே கவனித்துக் கொண்டு வந்தார்கள்.

**இந்தியாவுக்கு பயணம்.**

ஆகவே பிப்ரவரி மாதம் 27-ம் தேதி நாங்கள் ஒரு நீர்மூழ்கிக் கப்பலில் ஏறினோம். அப்போது எங்கள் உணர்ச்சி பெரிதும் மாறுபட்டிருந்தது. கடைசி வேளையில் என்ன தகராறுகள் நேர்ந்து விடுமோ என்று நாங்கள் அஞ்சினோம். நமது நோக்கங்கள் அனைத்தையுமோ ஒரு சிலவற்றையோ ஜப்பானியர்கள் தெரிந்து கொள்ளுவார்களானால், நாங்கள் இந்தியா போய்ச் சேரவேண்டு மென்னும் ஆசை நிராசையாகி விடும். ஆகவே எமது தோழர்களோடு நாங்கள் பேசிய போது மிகுந்த எச்சரிக்கை யோடு தான் பேசினோம்.

**நரகத்தினின்று நாட்டிற்கு**

மார்ச்சு மாதம் 25-ம் தேதி பாஸ்னி என்னுமிடத்தில், இந்தியா வந்து நாங்கள் இறங்கினோம். நாங்கள் தாராளமாக நடக்கக் கூட முடியாதபடி அவ்வளவு பலக் குறைவா யிருந்தோம். ஆனால் எங்கள் தாய் நாட்டிற்கு வந்து நாங்கள் சேர்ந்த உடனேயே, நாங்கள் பெரு மகிழ்ச்சி யடைந்தோம். ஜப்பானிய நரகத்தினின்று மீண்டு எங்கள் நாட்டிற்கு வந்து சேர்ந்தது பற்றி கடவுளுக்கு நன்றி செலுத்தினோம். கொஞ்ச நேரத்திற்கு முன்பு சிறிதளவு தூரங்கூட நடக்க முடியாத நிலைமையிலிருந்த நாங்கள், நெடுந்தூரம் போகக்கூடிய அளவிற்குப் பலம் பெற்று விட்டோம்.

நாங்கள் பாஸ்னிக்கு விரைந்து போனோம். நாங்கள் யாரிடமாவது எங்களை ஒப்புக் கொடுக்க வேண்டு மென்று விரும்பினோம். 1½ மைல்களுக் கப்பால் ஒரு பட்டண மிருந்தது. அங்கே சென்றோம். சென்ற 2 வருஷங்களுக்குப் பிறகு அன்று தான் நல்ல உணவை நாங்கள் சாப்பிட்டோம்.

மறுநாள் ஒரு விமானத்தில் கராச்சிக்குப் போனோம். அங்கிருந்து மற்றொரு விமானத்தில் குவாலியர் சென்றோம். பிறகு டில்லிக்கு ரயிலேறினோம். இப்போது நாங்கள் அனைவரும் எங்கள் குடும்பத்தாரோடு இனிது வாழுகிறோம்.

# விபரீதத் தியாகம்

"எலிஜா, ஜெர்மானியர் திடீரென்று நமது நாட்டின் மீது படை எடுத்துவிட்டார்கள், யாதொரு காரணமும் இல்லை, உனக்குத் தெரியுமா?"

"ஆம் எனக்குச் சிறிது பயமாக இருக்கிறது. இப்போது சண்டை யாருக்கு வேண்டும்? நிம்மதியாக இருக்கும் குடும்பங்களுக்கு வீண் விசனமும் பீடையும் தொந்தரவும் கொடுப்பார்களே."

"ஆமாம், நமது ருஷிய நாடும் போரில் இழுக்கப்பட்டுவிட்டது. இனி இரண்டு நாடுகளுக்கும் பகை ஏற்பட்டு விட்டது. திண்டாட்டம் தான்."

"நான் ஜெர்மனியில் பிறந்தவள் ஆயிற்றே. எனக்குத் தொந்தரவு வருமா?"

"சாதாரணமாகத் தொந்தரவு வரத் தான் செய்யும். ஆனால் நீ ருஷ்யாவில் வெகு காலம் இருந்து ருஷியப் பிரஜையாகவே ஆகிவிட்டாய் அல்லவா. மேலும், நீ ஜெர்மனியில் பிறந்தாய் என்பதை யார் ஞாபகம் வைத்திருப்பார்கள்."

"என் சகோதரன் சிறிது மும்முரமானவன். வந்தால் அவன் மூலமாகத் தான் தொந்தரவு வரலாகும். ஆகவே, சாக்கிரதையாக இருக்க வேண்டும்.

ஆமாம், நானும் உத்தியோகத்தில் இருப்பதினால் நாம் எல்லாரும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இனிமேல் விளையாட்டிடங்கள், சங்கங்கள், கூட்டங்கள், விருந்துகள் இவைகளுக்குப் போகக் கூடாது. எங்கு சென்றாலும் அரசியல் போர் இவைகளைப் பற்றிப் பேசவே கூடாது."

"சரி, அப்படியே செய்வோம்."

இவ்வாறு ஒரு ருஷிய உத்தியோகஸ்தனும் அவன் மனைவியும் தம் வீட்டில் ஒரு அறையில் பேசிக் கொண்டிருந்தார்கள். கணவன் பெயர் ஐவான் என்பது. ஒரு ருஷிய பண்டைய குடும்பத்தில் உதித்தவன். கலாசாலைப் படிப்பில் நன்றாகத் தேறி அரசியல் வேலையில் அமர்ந்தான். இப்போது அவன் ஒரு ஜில்லாத் தலைமை அதிகாரியாக வேலை செய்து வருகிறான். அவன் கலாசாலையில் வாசித்த காலத்தில் ஒரு ஜெர்மானியப் பெண் மீது காதல் கொண்டான். அவள் பெயர் எலிஜா. இருவரும் ஒத்த காதல் கொண்டு மணம் செய்துக் கொண்டார்கள். அப் பெண் ருஷியாவிலேயே தங்கி ருஷியப் பழக்க வழக்கங்களையே அனுசரித்து வந்தாள். ஜெர்மானிய வாஞ்சை சிறிதும் அற்றவள் ஆகிவிட்டாள். இவர்களுடைய குடும்பம் வெகு அமைதியாகவும் அன்யோன்யமாகவும் நடந்து வந்தது. உலகப் போர் வந்ததே, இத் தம்பதிகளுக்கு பெரும் திகில் பிறந்தது. அதை முன்னிட்டுத் தான், மேலேகண்ட சம்பாஷணை நடந்தது.

எலிஜாவுக்கு ஒரு சகோதரன் இருந்தான்.

அவன் பெயர் ஷில்லர். அவன் நிரந்தரமாக ஒரு தொழிலிலும் இறங்கினவன் அல்ல. பத்திரிகைத் தொழில், தொழிலாளர் சங்கம், முதலிய பல வேலைகளிலும் அமர்ந்தும் வெளி எறியும் வந்து கொண்டிருந்தான். அவன் மீது எலிஜாவுக்கு வெகு அன்பு. வீணாக வேலையின்றி அடிக்கடி கஷ்டப் படுகிறானே என்று சொல்லி வருந்துவாள். தன்னால் ஆன மட்டும் சிறிது சிறிதாகப் பொருளுதவி புரிந்து வருவாள். ஆனால் அவனுடைய உண்மைக் குணங்களோ நடவடிக்கைகளோ அந்த அம்மாளுக்குத் தெரியாது. போர் தொடங்கிய போது அவன் எத்தொழிலைச் செய்து வருகிறான் என்று அவளுக்குச் சற்றும் தெரியாது. ஐவானுக்கோ இவ்விதம் ஒரு மனிதன் உலகத்தில் உண்டு என்று கூடத் தெரியாது. தன் உத்தியோகத் தொழில் ஒன்று மாத்திரம் தெரியும். பிற சங்கதிகளை அவன் அறிந்துகொள்ள யத்தினப் படுவதே இல்லை. வீட்டுச் சம்பந்தமாக முழு அதிகாரமும் தன் மனைவியிடம் விட்டிருந்தான். மனைவி என்றால் உயிர்தான். அவள் சொன்னதை எப்போதும் தட்டினதே இல்லை. அவள் சொல் என்றால் தன் உயிரை விடவும் தயார் ஆக இருந்தான்.

* * *

ஒரு நாள் ஐவான் தன் ஆபீசில் வேலை செய்து கொண்டிருக்கும்போது பல செய்திகளில் ஒரு ஒற்றனைப் பற்றிய செய்தி வந்தது. தன் சரகத்திற்குள் 25 மைல்களில் உள்ள ஒரு ஊரிலே ஒரு ஜெர்மானிய ஒற்றன் பல ரிகார்டுகளுடன் பிடிபட்டான் என்றும், உடனே இராணுவ நீதி மன்றத்தார் அவனை விசாரித்து மரண தண்டனை இட்டிருக்கிறார்கள்

என்றும் மறு நாள் தண்டனை விதிக்கப்படும் என்றும் அதில் கண்டிருந்தது. அதைப் பற்றி ஐவான் அதிக சிரத்தை எடுத்துக் கொள்ள வில்லை. ஏனெனில் இவ்விதச் செய்திகள் அடிக்கடி வருவதுண்டு. அவைகளைப் பத்திரமாக ஆபீசில் தாக்கல் செய்து கொள்ளுவார்கள். அவ்வளவு தான்.

* * * *

அன்று மாலை எலிஜா தன் வீட்டில் வெளித் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு காற்று வாங்கி கொண்டிருந்தாள். இருந்தாற் போலிருந்து ஒரு சிறு பிச்சைக்காரப் பையன் தெருவாசலைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். ஒரு பிச்சைக்காரப் பையல் இத்தனை தைரியமாக உள்ளே வருகிறனே என்று அவள் வியப்பு அடைந்தாள். உள்ளே வந்து அவன் "அம்மா, நீங்கள் தானே எலிஜா அம்மாள்? ஜில்லா அதிகாரி ஐவானின் மனைவி?", என்றான்.

"ஆமாம், அதற்கென்ன," என்றாள். "இதோ உங்களுக்கு ஒரு கடிதம்" என்று சொல்லி, கையில் கொடுத்துவிட்டு உடனே போய்விட்டான்.

எலிஜா அம்மாள் சிறிது வியப்புடன் அக்கடிதத்தைப் பிரித்து வாசித்தாள். அதில் அடியிற் கண்டவாறு இருந்தது.

"அன்புள்ள அக்கா,

நான் உயிர்போகும் ஆபத்தில் இருக்கிறேன். இராணுவ மன்றத்தார் என்னை ஜெர்மானிய ஒற்றன் என்று தீர்ப்பு சொல்லி மரண தண்டனை விதித்துள்ளார்கள். நாளைக் காலை 5 மணிக்கு தண்டனையாம். உன் கணவனிடம் சொல்லி என்னைத் தப்புவிக்கவேண்டும். ஆபத்து! அவசரம்!

தம்பி,
ஷில்லர்."

இதனைப் படித்தவுடன் எலிஜா திடுக்கிட்டுப் போனாள். தனக்கே தூக்குத் தண்டனை இட்டதாக நெஞ்சழிந்து போனாள். நிலத்தின் மீது சோர்ந்து விழுந்தாள். தன் தம்பியை எவ்வாறு தப்புவிப்பது என்று எண்ணினாள்.

* * * *

சிறிது நேரம் கழித்து ஐவான் ஆ[illegible]சிலிருந்து வந்தான். தன் மனைவியின் முகவாட்டம் கண்டு தயங்கினான்.

"எலிஜா, உடம்பிற்கென்ன. காய்ச்சலா," என்றான்,

"காய்ச்சல் ஒன்றும் இல்லை. இதனைப் பாருங்கள்" என்று கடிதத்தை நீட்டினாள்.

ஐவான் கடிதத்தை வாசித்தான். அவனும் திடுக்கிட்டுப் போனான். அன்று ஆபீசுக்கு வந்த செய்திகளிலே ஒரு ஒற்றனுடைய விசாரணையும் தண்டனையும் குறித்திருந்தது. ஞாபகம் வந்தது. அந்த ஒற்றன் தன் சொந்த மைத்துனன் என்று இப்போது அறிந்தான். என்ன செய்வது என்று அவனுக்குத் தோன்றவில்லை,

"எலிஜா, நமக்குக் கலி காலம் வந்து விட்டது. இதன் கொடுமைகளை எவ்வாறு மீறுவதோ தெரியவில்லை. ஷில்லரைத் தப்புவிப்பது எப்படி என்று தோன்றவில்லை. இராணுவ அதிகாரிகளிடம் எனது ஜெபம் சாயாது. ஏதாவது தந்திரம் செய்ய வேண்டும்."

"என் தம்பி எனக்கு ஒரே சகோதரன். எனக்கு உயிர் போன்றவன். நீங்கள் அவனைத் தப்புவிக்க வேண்டும். உங்கள் உயிரைக் கொடுத்தாகிலும் அவனை தப்புவித்து விடுங்கள்" என்றாள்.

"சரி, முயற்சிக்கிறேன்," என்றான். "முயற்சி, என்று சொல்லக் கூடாது. செய்தே தீரவேண்டும். உங்கள் அன்பை இதனாலே தான் நான் சோதிக்கிறேன்," என்று மிக ஆவேசத்தோடு கூறினாள். இவ்வார்த்தைகள் ஐவான் நெஞ்சைத் துளைத்தன. தன் மனைவியின் நெஞ்சு நோக எதுவும் அவன் செய்தது கிடையாது, "உன் உயிரைக் கொடுத்தாகிலும் அவனைத் தப்புவிக்க வேண்டும்", "இது உன் அன்பிற்கு ஒரு சோதனை" என்ற வாக்கியங்கள் அவன் மனக் கண் எதிரே தாண்டவமாடின. அதனை உலகிலே தன் வாழ் நாளிலே நிரூபிக்க வேண்டும் என்று ரோஷத்துடன் தீர்மானித்து விட்டான். எலிஜாவோ அவ்வாக்கியங்களை ஆவேசத்தினால் சொன்னாளே தவிர, தன் கணவனைச் சோதிப்பதற்காகச் சொல்லவில்லை. ஆனால் விளைந்த விபரீதங்களைக் குறிப்போம்.

* * * *

ஐவானும் மனைவியும் உணவருந்த உட்கார்ந்தார்கள். உணவு இறங்கவில்லை. ஐவான் என்னென்னமோ எண்ணிக் கொண்டிருந்தான். அறை குறையாக உணவருந்தியதும் ஐவான் எழுந்து உடுத்திக் கொண்டான். தன் மனைவியிடம் விடை பெற்றுக் கொண்டு தன் விசை வண்டியைத் தானே ஓட்டிகொண்டு வேகமாகச் சென்றான். எலிஜா வெகு நேரம் என்னென்னமோ யோசித்து விட்டு படுக்கைக்கு சென்று களைப்பினால் உறங்கி விட்டாள்.

* * * *

விடியலுக்கு முன்னால் சுமார் 4 மணி இருக்கும். யாரோ மெதுவாகக் கதவைத் தட்டின சத்தம் கேட்டது. எலிஜா விழித்துக் கொண்டாள், தன் கணவன் தான் வந்து விட்டதாக எண்ணிக் கதவைத் திறந்தாள்.

"ஐவான், என்ன ஆயிற்று" என்று வெகு ஆத்திரத்துடன் கேட்டாள்.

"ஐவான் அல்ல, அக்கா, நான் தான் ஷில்லர்" என்றான் வந்த மனிதன்.

"தம்பி, எப்படித் தப்பித்துக் கொண்டு வந்தாய். உன் மைத்துனர் எங்கே" என்றாள்.

"அக்கா, நான் மாத்திரம் வந்துள்ளேன். மைத்துனர் அங்கேயே இருக்கிறார்."

"என், என்ன நடந்தது. சொல், சீக்கிரம்." "நேற்று இரவு 10-மணிக்கு ஐவான் சிறைச்சாலையில் என் அறைக்குள் வந்தார். உடனே தன் உடைகளைக் களைந்து என்னை அணிந்துக் கொள்ளும்படி ஏவினார். என் உடைகளை அவர் அணிந்து கொண்டார். நான் வியந்து போய் ஏன் இப்படி செய்கிறீர்கள், என்று கேட்டேன். 'உன்னைத் தப்புவிக்கத் தான்' என்றார். 'நீர் எவ்வாறு தப்பித்துக் கொள்வது என்று கேட்டேன்.' அதைப் பற்றி 'உனக் கென்ன கவலை. நான் பார்த்துக் கொள்கிறேன். நீ உடனே ஒருவருடனும் பேசாமல் என் விசை வண்டி ஏறி உன் அக்காளிடம் செல்' என்று அதிகார தோரணையில் பேசினார். நான் பதில் சொல்லாமல் வெளியே வந்தேன். காவலாளிகள் என்னை அதிகாரி ஐவான் என்று எண்ணி வெளியே விட்டார்கள். விசை வண்டி ஏறி மெதுவாக இங்கே வந்து விட்டேன். இது தான் எனக்கு தெரியும்" என்றான்.

"ஐயோ, உனக்குப் பதிலாக அவர் உயிர் கொடுக்கவா சென்றார்? என்ன விபரீதமாகுமோ" என்று சொல்லி நடுநடுங்கினாள், எலிஜா.

* * * *

காலை சுமார் 6-மணி இருக்கும் தந்திப் பேச்சு வந்தது. அது உத்தியோக தோரணையில் ஆபீசுக்கு வந்தது. உடனே வீட்டிற்கு அனுப்பப்பட்டது. எலிஜா அம்மாள் வாசித்துப் பார்த்தாள்.

"ஜெர்மானிய ஒற்றன் இன்று காலை இருட்டோடே 5-மணிக்கே சுடப்பட்டான். பிரேதம் பெட்டியில் அடக்கம் செய்து விடப்பட்டது. அதிகாரிகள் வந்தவுடன் சிறைச்சாலைக் கல்லறையில் அடக்கம் செய்யப்படும்" என்று அச் செய்தியில் இருந்தது.

எலிஜாவிற்கும் ஷில்லருக்கும் பொருள் விளங்கிற்று. 'இருட்டில் ஐவான் என்று அறியாமல் உடையைக் கொண்டு ஷில்லர் என்று ஏமாறி, மரண தண்டனையை நிறைவேற்றி விட்டார்கள். தன் பெண் சாதியின் பேச்சிற்காக தன் மைத்துனனைத் தப்பிவிக்கத் தன் உயிரைத் தியாகம் செய்து விட்டான் அந்த வள்ளல்' என்று புலப்பட்டது.

எலிஜா 'ஐயோ!' என்று அலறத் தொடங்கினாள். மூர்ச்சைப் போனாள். ஷில்லர் உடனே, அவளை எழுப்பி தேறுதல் சொல்லி "இனி ஒரு விநாடியும் இங்கே தங்கக் கூடாது. மிகவும் அபாயம் ஏற்படும். போனது போகட்டும். உடனே புறப்பட வேண்டும்" என்று சொல்லி கிடைக்கக் கூடிய பணத்தை எடுத்துக் கொள்ளும்படி ஏவினான். இன்னது செய்வது என்று தோன்றாமல் பொம்மை போல எலிஜா அவன் சொன்னபடி செய்து விசைவண்டி ஏறினாள். ஷில்லர் அதில் ஏறி வண்டியை ஜெர்மன் எல்லைப் புறமாக ஓட்டினான்.

* ° *

"காதலுக்காக எப்பேர்பட்ட தியாகம்! இப்படியும் உலகில் ஏற்படக் கூடுமோ" என்று வியந்தார்கள், இக்கதையைக் கேட்ட மக்கள்.

—கோவைக் கிழார்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.